[27th July 1962

மன்றத்தில் நான் ஒன்று சொன்னேன். அதையே இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். **Madras** என்று சொன்னால் வெளி நாட்டில் அதற்கு நல்ல பெயர் இருக்கிறது. **Goodwill** இருக் கிறது. **Madras** என்ற பெயரை மாற்றுவது நல்லதல்ல. அது இந்த மாநிலத்தின் நன்மைக்கு உகந்தது அல்ல என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: கான்ஸ்டிட்யூஷனை மாற்றாமலேயே "தமிழ்நாடு" என்ற பெயரை நாமாகவே வைத்துக்கொள்வதைச் சட்டம் அனுமதிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டம் ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை.

Public Administration (System of Inspection)

* 714 *Q.*—Sri C. CHIRANJEEVALU NAIDU (on behalf of Sri V. SANKARAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a party of Officers have been deputed by the Central Government to study the system of inspection in public administration in the State; and

(*b*) if so, the nature and scope of their work?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

அரசியல் கைதிகள்

* 715 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள அரசியல் கைதிகள் ஏதாவது நிபந்தனைகளின்மீது விடுதலை செய்யப்பட்டனரா?

(இ) எந்த அடிப்படையில்?

(உ) அதற்கான காரணமென்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) There were no political prisoners in our State. The Member apparently refers to certain life-term prisoners, who were recently released by Government.

(*b*) & (*c*) These prisoners were released taking into consideration the long period of imprisonment undergone by them and the remission earned by them.

Elementary school (upgrading)

* 716 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the panchayat union Councils are not consulted by the educational authorities at the time of upgrading of the elementary schools into higher elementary schools; and

27th July 1962]

(b) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir, panchayat union councils are consulted.

(b) Does not arise.

SRI C. CHIRANJEEVALU NAIDU : Sir, some of the elementary schools are being upgraded as higher elementary schools even in areas where high schools are situated within a radius of one mile. So, I request the Government to see that elementary schools are not upgraded in areas where high schools are situated.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is done in consultation with the panchayat union. It is for the panchayat union to consider this question and forward the necessary recommendations.

திரு. கரு. சிமைச்சாமி : மைக் சரியாக வேலை செய்யவில்லையே. முக்கியமாக பத்திரிகை ரிபோர்ட்டர்கள் இருக்கும் இடத்தில் சரியாகக் கேட்கவில்லையே.

கனம் சபாநாயகர் : நீங்கள் அங்கு இல்லையே.

திரு. கரு. சிமைச்சாமி : மைக் சரி செய்யப்படுகிறவரைக்கும் சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கலாம்.

கனம் சபாநாயகர் : கேள்வி 717-ஐ இப்பொழுது எடுத்துக் கொள்ளலாம்.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகள்

* 717 கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இளையான்குடியில் ஏற்படுத்தவிருக்கும் கூட்டுறவு விவசாயப் பண்ணையில் கிழயூர் கிராமத்தில் உள்ள அரசாங்க தரிசு நிலத்தை சேர்க்க உத்தேசமுண்டா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A proposal for the starting of a Joint Farming Co-operative Society utilizing certain Government poromboke lands in Kilayur village near Ilayangudi has been taken up for investigation by the Deputy Registrar, Sivaganga, in consultation with the Agricultural Department and the case is pending examination by the Deputy Registrar and the Registrar of Co-operative Societies.

* 718 கேள்வி.—திரு. ஸி. சிரஞ்சீவலு நாயுடு (திரு. டி. கதம்பவனசுந்தரம் சார்பாக) : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கம்பிக்குடியில் அரசியல் தியாகிகளுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களைச் சேர்த்து கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்தக் கோரி சமீபத்தில் சர்க்காருக்கு மனு ஏதேனும் வந்திருக்கிறதா?